19 மார்ச் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு(உள்ளடக்கியது) பங்கெடுப்பு,(படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: **குடும்பமும் இறைவேண்டலும்**

நிகழ்வின் நோக்கம்: **உலக இறைவேண்டல் நாள் - தவக்காலம்**

## நான் பார்க்க வேண்டும்

எல்லோரும் அவனைப் பார்த்தார்கள் ஆனால் அவரைக் காணவில்லை. அவ்வாறு அவர்கள் பார்த்திருந்தால் தங்களின் குருட்டுத்தன்மையை அவர்கள் எதிர்கொண்டிருப்பர். பிறப்பிலிருந்தே பார்வையற்றிருந்த இந்த மனிதன் ஒரு தனிமனிதனை அல்ல ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் பிரதிபலிக்கிறது. யோவான் நற்செய்தியில் குறிப்பிடும் அந்த



பார்வையற்றவருக்கும் பிறருக்கும் இருந்த வேறுபாடு பார்வையற்றவருக்கு தனக்குப் பார்வையில்லை என்பது தெரிந்திருந்தது. நாமும் பார்வையற்றவர்கள் என்பதை அறிந்துகொள்ளும் வரை, நாம் புதிய கண்களால் பார்க்கமுடியாது. நிச்சயமாக, நாம் தான் பார்வையற்றவர்கள் அல்லவா?

பார்வையற்ற நிலை என்பது நம்முடைய பார்வையின் தரமோ அல்லது கண்களின் நிலையைப் பற்றியதோ அல்ல. நம்மைச் சுற்றியிருக்கும் இருளைப் பற்றியதும் அல்ல; மாறாக அது நம்முள் இருக்கும் இருளைப் பற்றியது. பிறரை எவ்வாறு நாம் பார்க்கிறோம். உலகில் நாம் எதைப் பார்க்கிறோம், நம்மைப் பார்ப்பதைவிட, நம்மைச் சுற்றியிருக்கும் பொருள்களைத் தான் அதிகமாகப் பார்க்கிறோம். கடவுளைப் பார்ப்பதில்லை, மக்களை, பொருட்களை அல்லது சூழ்நிலைகளை இருப்பதைப் போலப் பார்க்காமல், நாம் எவ்வாறு இருக்கிறோமோ அவ்வாறு பார்க்கிறோம். கிறிஸ்துவால் நம் கண்கள் திறக்கப்படும்வரை நம்மையே உலகிற்கு முன்னிறுத்தித் தான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எதை பார்க்கிறோம், எப்படிப் பார்க்கிறோம் என்பது நமது உள் உலகத்தை வெளிப்படுத்துகிறது. அவையெல்லாம் நமக்குள் இருக்கும் அச்சங்கள், நம்மோடு கூட இருக்கும் இணைப்புகள் மற்றும் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைகளை விவரிக்கின்றன மற்றும் அவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன.

உண்மையில் கடவுளைப் பார்க்கவிரும்பினால், பிறர் எவ்வாறு இருக்கிறார்களோ அவ்வாறே அவர்களை ஏற்று நமக்குள் என்ன நடக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். உண்மையான பார்வை நம் இதயத்திலிருந்து தான் தொடங்குகிறது, கண்களில் இருந்து அல்ல. நம்முடைய அச்சங்களை, இணைப்புகளை மற்றும் அவை எவ்வாறு நம் பார்வையைப் பாதிக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தொடங்க வேண்டும்.

உணவு நேரத்திற்கு முன் அன்றாட வாசகங்களை வாசித்து ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு, எவ்வாறு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தலாம். **“தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும். - ஆண்டவரே, நான் பார்க்க வேண்டும்”** செபிக்கவும், உண்ணாநோன்பு இருக்கவும் அது ஒருசில மணி நேரங்களாகவே இருந்தாலும், குடும்பமாக முடிவெடுங்கள். உங்களின் உண்ணாநோன்பின் மூலம் சேகரித்த தொகையை ஒன்றாகக் கொண்டுவாருங்கள். அதை உதவி தேவப்படும் குடும்பத்திற்கு தர்மகாரியமாகப் பயன்படுத்துங்கள்.

“தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும். - ஆண்டவரே, நான் பார்க்க வேண்டும்”

**இன்றைய வாசகங்கள்:**

நற்செய்தி:
யோவான் 9: 1-41
பார்வையற்ற மனிதன்



*Published by:*
Peninsular Malaysia Pastoral Team
*Email:* api@archkl.org
INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2023